09.10.2017

தினமலர்

# மேட்டூர் நீர்மட்டம் 95.47 அடியாக உயர்வு



மேட்டூர்:நீர் திறப்பை விட , வரத்து அதிகரித்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் , 95.47 அடியாக உயர்ந்தது.காவிரி நீர்பிடிப்பு பகுதியில் , பருவமழை தீவிரம் குறைந்ததால் , நேற்று முன்தினம், 23 ஆயிரத்து, 177 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து , நேற்று, 21 ஆயிரத்து, 998 கன அடியாக சரிந்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு , வினாடிக்கு, 15 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர் திறப்பை விட , வரத்து கூடுதலாக இருப்பதால் , நேற்று முன்தினம் , 94.99 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று, 95.47 அடியாக உயர்ந்தது.

## அக்.,12 வரை தமிழகத்திற்கு மழை வாய்ப்பு




சென்னை:தமிழகம், புதுச்சேரியில், அக்., 12 வரை மிதமான மழை இருக்கும் என , வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவ மழை , வட மாநிலங்களில் இருந்து படிப்படியாக விலகி , தென் மாநிலங்களை நெருங்கி உள்ளது. அதனால், ஆந்திரா, தெலுங்கானா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் , மழை கொட்டுகிறது.

இந்நிலையில், தமிழகத்தை ஒட்டிய , வங்க கடல் பகுதியில் , ஆந்திரா முதல் , கன்னியாகுமரி வரை , மேல் அடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கட லோர பகுதிகளில் , அக்., 12 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தினமணி

## பழையகோட்டை சந்தையில் ரூ. 70 லட்சத்துக்கு காங்கயம் இன மாடுகள் விற்பனை



நத்தக்காடையூர் அருகே பழையகோட்டை மாட்டுச் சந்தையில் ரூ. 1 லட்சத்து 35ஆயிரத்துக்கு விற்கப்பட்ட காங்கயம் இன பசுமாடு.

காங்கயத்தை அடுத்துள்ள நத்தக்காடையூர் அருகே பழையகோட்டை மாட்டு சந்தையில் காங்கயம் இன மாடுகள் ரூ. 70 லட்சத்துக்கு விற்பனையாயின.

காங்கயம் தாலுகா , நத்தக்காடையூர் பழையகோட்டையில் காங்கயம் இன மாடுகளுக்கான சந்தை ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது.

இந்த சந்தையில் காங்கயம் இன மாடுகள் மட்டுமே விற்பனைக்கு அனுமதிக்கப்படுகின்றன. இதில் , கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், நாமக்கல் போன்ற மாவட்டங்களிலிருந்து விற்பனைக்காக விவசாயிகள் மாடுகளை

கொண்டு வருகின்றனர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சந்தையில் மாடுகள், காளைகள், கன்றுகள் என 190 மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. இதில் காங்கயம் இன மாடுகள் ரூ. 30 ஆயிரம் முதல் அதிகபட்சமாக ரூ. 1 லட்சத்து 35 ஆயிரத்துக்கு விற்பனையாயின. பசுங்கன்றுகள் ரூ. 30 ஆயிரம் முதல் ரூ. 50 ஆயிரம் வரை விற்பனையாயின. காளை கன்றுகள் ரூ. 20 ஆயிரம் முதல் ரூ. 60 ஆயிரம் வரை விற்பனையாயின. இதில் மாடுகள், காளைகள், கன்றுகள் என மொத்தம் ரூ. 70 லட்சத்துக்கு விற்பனை நடைபெற்றதாக சந்தை மேற்பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## புரட்டாசி மாதம் என்பதால் கோயம்பேட்டில் காய்கறி விலை உயர்வு: சாம்பார் வெங்காயம் ரூ.100, முருங்கைக்காய் ரூ.90-க்கு விற்பனை



புரட்டாசி சைவ மாதம் என்பதால் காய்கறிகள் பயன்பாடு அதிகரித்த நிலையில் , கோயம்பேடு சந்தையில் இந்த வாரம் காய்கறி விலை உயர்ந்து இருந்தது. நேற்று , சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.100-க்கும், முருங்கைக்காய் ரூ.90-க்கும் விற்கப்பட்டது.

புரட்டாசி மாதம் தொடங்கியதிலிருந்து , பொதுமக்கள் பெரும்பாலானோர் அசைவம் தவிர்த்து, சைவ உணவுகளை உண்டு வருகின்றனர். மேலும் புரட்டாசி மாதத்தில் பொதுமக்கள் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் வெங்கடேச பெருமாளுக்கு படையலிட்டு வணங்கி வருவதால் , காய்கறிகள் தேவை அதிகரித்துள்ளது. அதன் காரணமாக கோயம்பேடு சந்தையில் காய்கறிகளின் விலை , கடந்த 3 வாரங்களாக உயர்ந்து வருகிறது.

கடந்த வாரம் ரூ. 15-க்கு விற்கப்பட்ட தக்காளி , நேற்று ரூ. 25 ஆகவும், ரூ.90-க்கு விற்கப்பட்ட சாம்பார் வெங்காயம் ரூ. 100 ஆகவும், ரூ.70-க்கு விற்கப்பட்ட முருங்கைக்காய் ரூ.90 ஆகவும், ரூ.25-க்கு விற்கப்பட்ட கேரட் ரூ.35 ஆகவும், ரூ.22-க்கு விற்கப்பட்ட பெரிய வெங்காயம் ரூ. 28 ஆகவும் உயர்ந்துள்ளது.

மேலும், கத்தரிக்காய் ரூ. 30, உருளைக்கிழங்கு ரூ. 16, அவரைக்காய் ரூ. 60, வெண்டைக்காய் ரூ. 15, முள்ளங்கி ரூ. 30, பாகற்காய் ரூ. 18, பீன்ஸ் ரூ. 70, முட்டைக்கோஸ் ரூ. 21, புடலங்காய் ரூ. 15, பச்சை மிளகாய் ரூ. 7-க்கு விற்கப்பட்டு வருகிறது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

# மேட்டூர் அணை நீர்மட்டம் 95 அடியாக உயர்வு



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 95 அடியாக உயர்ந்து உள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், மழையின் தாக்கம் வெகுவாக குறைந்து விட்டது. இதன் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்தும் சரிந்துள்ளது. நேற்று முன்தினம் விநாடிக்கு 23,877 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 21,991 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து டெல்டா மாவட்டங்களின் சம்பா சாகுபடிக்காக, விநாடிக்கு 15 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. நேற்று முன்தினம் 94.99 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 95.47 அடியாக உயர்ந்தது. ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் 25 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 22 ஆயிரம் கனஅடியாக சரிந்தது. ஏற்கனவே, பரிசல் ஓட்டிகள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், நீர்வரத்து அதிகரிப்பை காரணம் காட்டி, பரிசல் சவாரிக்கான தடையை 9வது நாளாக நேற்றும் நீட்டித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது.